# முஸ்லிம் குடும்பங்களில் நிலவும் கலப்பு திருமணங்களுக்கு ஏதுவான காரணங்கள் மற்றும் விளைவுகள் : நாச்சியாதீவு பிரதேச நிலை பற்றிய ஆய்வு

# The Reasons for Mixed Marriages in Muslim Families and their impacts: A Study Based on Naachchiyatheevu Region

M.F.F. Hifra[1] & S.M.M. Nafees[2]

[1]B.A Honors Degree Holder in Islamic Law at South Eastern University of Sri Lanka.
[2]Senior lecturer in Department of Islamic Studies and Arabic Language.
hifrafarooque@gmail.com, smmnafees@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

திருமணம் தொடர்பாக எழும் பிரச்சினைகள் வெவ்வேறு கோணங்களில் ஆய்வுகள் காலத்தின் தேவைக்கேற்ப இடம்பெற்றுவருகின்ற போதிலும், கலப்பு திருமணம் தொடர்பாக இலங்கையில் முன்மொழிவுகள் குறைந்தபட்ச எண்ணிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற பின்னணியில் கலப்பு திருமணம் சமூக மற்றும் மத அங்கீகாரம் கிடைத்தும், கிடைக்கப்பெறாமலும் காலந்தொட்டு இடம்பெற்று வருகின்றமையை மறுக்க முடியாது. இவ்வாறான திருமணம் இடம்பெறுவதற்கு ஏதுவான காரணிகளை கண்டறிவதும், திருமணத்தின் பின்னர் எழும் விளைவுகளை அடையாளப்படுத்துவதும் இவ்வாய்வின் பிரதான குறிக்கோள்களாக திகழ்கின்றன. பண்பு சார் ஆய்வு முறையில் அமைந்த இவ்வாய்வுக்காக, நாச்சியாதீவு பிரதேசத்தில் கலப்பு திருமணம் செய்த 50 பேர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டு தரவுகள் குறியீட்டு முறையில் பகுபாய்வு செய்யப்பட்டுள்ளதோடு, மீளாய்வுகளையும் கொண்டமைந்துள்ளது. சமயம், குடும்பம், பொருளாதார சார்ந்த காரணங்கள் கலப்பு திருமணம் ஏற்படுவதற்கு பிரதான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளதுடன், கலப்பு திருமணம் தொடர்பாக சமூகத்தில் பராமுக போக்கினை அவதானிக்க முடிகின்றது, இதனால் குடும்பம், சமயம், கலாசாரம், சமூக சார்ந்த தாக்கங்கள் ஏற்படுவதோடு, சிறந்த குடும்பத்தை கட்டியெழுப்புவதில் சிக்கல்களும் உருவாகிறன. கலப்பு திருமணம் இடம்பெறுவதன் மூலம் சமூத்தில் ஏற்படும் பாதக விளைவுகளிருந்து தவிர்த்து கொள்வதற்கான முன்மொழிவாகவும், எதிர் காலத்தில் மாணவர்கள், ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் இவ்வாய்வு அமையவல்லது.

திறவுச்சொற்கள்: கலப்பு திருமணம், நாச்சியாதீவு பிரதேசம், முஸ்லிம் குடும்பம்

## அறிமுகம் (Introduction)

மனித வாழ்வில் பலதரப்பட்ட நெறிமுறைகளை பிணைத்து உருவாக்கப்பட்ட கோட்பாடுகளில் ஒன்றான திருமணம் இரு நபர்களுக்கிடையிலான ஓர் தனியார் வணிகமாகவும், தெய்வீக விழுமியங்களை உறுதிப்படுத்தும் ஓர் நிறுவனமாகவும், திருமண உறவில் மதத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதன் மூலம் குடும்பத்தின் பங்கை அரசு உறுதிப்படுத்துகின்றது. (Ratno Lukito .2009)

கலப்பு திருமணம் என்பது வெவ்வேறான இனங்களுக்கிடையில் அல்லது மதங்களுக்கிடையிலான திருமணமாகவும், மதம், இனம், சாதி என்ற வேறுபாடின்றி ஆணும் பெண்ணும் தத்தமது விருப்பின்படி மேற்கொள்ளும் திருமண முறையாகவும் கருதப்படுகிறது. கலப்பு திருமணம் தொடர்பாக இஸ்லாத்தில், விசுவாசிகளே! (அல்லாஹ்வுக்கு) இணைவைக்கும் பெண்களை, அவர்கள் விசுவாசம் கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள், (ஏனென்றால்) இணைவைக்கும் ஒரு பெண்ணை விட அவள் உங்களைக் கவரக்கூடியவளாக இருப்பினும், விசுவாசியான ஓர் அடிமைப் பெண் மிகச் சிறந்தவளாவாள் மேலும், இணைவைக்கும் ஆண்கள் விசுவாசம் கொள்ளும் வரை அவர்களுக்கு விசுவாசியான பெண்களை திருமணம் செய்து கொடுக்காதீர்கள். இணைவைக்கும் ஒரு ஆணைவிட அவன் உங்களைக் கவரக்கூடிவனாக இருப்பினும் ஒரு விசுவாசியான அடிமை மிகச் சிறந்தவனாவான். (ஸூரா பகரா: 221)

மேலும் கலப்பு திருமணம் தொடர்பாக கிறிஸ்தவ மதத்தில் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு போன்றவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆணும் பெண்ணும் இனக் கலப்புத் திருமணம் செய்துகொள்வது கடவுளுக்குப் பிரியமானதே! கடவுள் பாரபட்சம் காட்டாதவர், சரியானதைச் செய்கிறவன் எந்த தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனை அவர் ஏற்றுக்கொள்கிறார். (அப்போஸ்தலர்- 10: 34, 35) 'கிறிஸ்தவ பெண் ஒரு கிறிஸ்தவ ஆணையே மணம் முடிக்கவேண்டும், ஆணும் அப்படியே.'( புதிய ஏற்பாடு 1 கொரிந்தியர் 7:39)அதே போன்று இந்து மதத்திலும், மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிடும் போது 'ஒரு பெண் தான் பருவமெய்த பின்னர் தந்தை தன்னைத் தக்க ஆடவனுக்கு மணம் செய்துவிப்பானென எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நடைபெறாவிடில், தனக்கேற்றவனைத் தானே தேடிக்கொள்ளவும் என குறிப்பிடுகின்றது. (மனுதர்ம சாஸ்திரம், அத்தியாயம்- 9, செய்யுள்: 90)

இருப்பினும் மதச்சுதந்திரம் பற்றி 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தில் (UDHR) ஒருவர் தனக்கு விரும்பிய மதத்தை பின்பற்ற சுதந்திரமானவர் மேலும், பருவம் அடைந்த ஆண், பெண் இருபாலாரும் இனம், தேசியம், மதம் வேறுபாடின்றி விருப்பமான வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதற்கும், சிறந்த குடும்பத்தினை கண்டறிவதற்கும் உரிமை வழங்கப்பட்டது போல அதனை ரத்து செய்வதற்கும் உரிமையானவர்.(Article-16,18)

அனுராதபுர மாவட்டத்தில் 19 கிராம சேவகப்பிரிவிற்கு உட்பட்ட நாச்சியாதீவு பிரதேசத்தில் 8833 குடும்பங்களில் 15843 ஆண்களையும், 14885 பெண்களையும் 30728 மொத்த சனத்தொகையினைக் கொண்டது. இங்கு சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழக்கூடிய கிராமங்கள் சூழ அமைந்துள்ளன. மேலும் நாச்சியாதீவு பிரதேச மக்கள் வேலை மற்றும் உயர்கல்வியினை மேற்கொள்ள அயல் பிரதேசங்களில் இடைத்தொடர்பும் காணப்படுகின்றது (நாச்சியாதீவு பிரதேச செயலக அறிக்கை-2018) கலப்பு திருமணம் நாச்சியாதீவு பிரதேசத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே இடம்பெற்று வருகின்றது. இத்திருமணம் இடம்பெறுவதற்கான காரணங்கள் மற்றும் இத்திருமண முறை மூலம் ஏற்படும் விளைவுகளை கண்டறியப்பட வேண்டிய நிலையிலும் சில ஆலோசனைகளை முன்வைப்பதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

கலப்புத்திருமணம் உலகநாடுகளில் பல்வேறு முறைகளிலும் இடம்பெறுவதனால், குறிப்பிட்ட சில நாடுகளில் வரவேற்கத்தக்தாக இருந்தாலும், இத்திருமணத்தின் விளைவுகள், நடைமுறைகளை எடுத்துக்காட்டி பல்வேறு ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன. தென்கிழக்கு ஆசிய ஆய்வு நிறுவனத்தினால் (ISEAS) மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மாநாட்டின் அடிப்படையில் இந்தோனேசியா, மலேசியா, ஆகிய நாடுகளில் கலப்புத்திருமணம் இடம்பெறுவதற்கு மதம் சார்ந்த தடைகள் இருந்த போதிலும் இத்திருமணம் இடம்பெறுவதால் சர்சைகளையும், கடினத்தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் கலப்புத்திருமணம் முஸ்லிம் சட்டத்தின் கீழ் அனுமதிக்கவில்லை என்றாலும் சிவில் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. பிலிப்பைன்ஸில் கலப்பு திருமணம் மேற்கொள்வோர்களுக்கு கடினத்தன்மை விதிக்கவில்லையென்ற சட்டங்களை அவதானிக்கலாம். (Chee Herig Leng, Gavin W. Jones and Maznah Mohamad (2009)

இலங்கையிலும் ஆரம்ப காலங்களில் இருந்து இத்திருமணத்திற்கு எதிரான கருத்துக்கள் வலுவடைந்து வருகின்ற சந்தர்ப்பத்திலும், யுத்தத்தின் பின்னர் இத்திருமண முறையினை சிலர் ஆதரிக்காமலும் இல்லை. 1951 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் ஓரு முஸ்லிம் அல்லாத ஆணை வலிதான முறையில் திருமணம் செய்ய முடியும். ஆயினும் அவ்வாறான திருமணம் முஸ்லிம் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெறமாட்டாது. திருமணத்தின் பின் அப்பெண் பொது சட்டத்தின் கீழ் ஆளப்படுவார். (சூளனி, 2009)

W.A.Fazila (2013) என்பவரால் எழுதப்பட்ட 'கொட்டியாக்கும்புற முஸ்லிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்கள்' எனும் ஆய்வு கட்டுரையில் கலப்பு திருமணம் தொடர்பிலான காரணங்கள், விளைவுகளை அவதானிக்க முடிகின்றது. மேலும் Rizka Gita Kartikasari (2017) என்பவரால் எழுதப்பட்ட Communication Pattern Of Mixed Marriage (A Qualitative Study on the Mixed Marriage Parents Educating Their Children) எனும் ஆய்வுக்கட்டுரையில், கலப்பு திருமணத்தின் மூலம் தத்தமது பிள்ளைகளின் தொடர்பாடல் முறையானது எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதனை அறியக்கூடிய வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வு நோக்கம் (Objectives)**

நாச்சியாதீவு பிரதேச குடும்ப சூழலில் கலப்பு திருமணம் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிதல்.
இத்திருமணத்தின் பின்னர் எழும் விளைவுகளை அடையாளப்படுத்துதல்.

**ஆய்வு முறை (method)**

பண்பு ரீதியான இவ்வாய்வானது, முதலாம் நிலைத்தரவுகளாக நாச்சியாதீவு பிரதேசத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக கொண்ட 5 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கலப்பு திருமணம்

செய்தவர்கள் 50 பேர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் முஸ்லிம் ஆண்களை விட (31 பேர்) முஸ்லிம் பெண்கள் ( 19 பேர்) குறைவாக உள்ளதோடு. இவர்கள் அனைவரும் திருமணம் செய்த துணைகள் அதிகமாக ( 32 பேர்) சிங்கள மதத்தை பின்பற்றியவர்களையும், மேலும் தமிழர்கள் 13 பேரையும் கிறிஸ்வர்கள் 5 பேரையும் திருமணம் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இரண்டாம் நிலைத்தரவுகளாக கலப்பு திருமணம் தொடர்பான ஆய்வு கட்டுரைகள், நூல்கள், கட்டுரைகள் போன்றன இலக்கிய மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாயப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்களும் கண்டுபிடிப்புக்களும் ( Results & Discussions )

### நாச்சியாதீவு பிரதேசத்தில் கலப்பு திருமணம் இடம்பெற ஏதுவான பின்னணி

### விருப்பமான துணையை தெரிவு செய்தல்

கலப்பு திருமணம் செய்துகொள்ள முனைவதற்கு ஒருவருக்கொருவர் மதம், சமயம் கலாச்சாரம் தாண்டி நேசம் கொள்வதன் மூலம் அவர்கள் ஈர்க்கப்படுகின்றமையால் குடும்ப சம்மதம் இன்றி பெரும்பான்மையினர்கள் ( 41 பேர்) திருமணம் செய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு விருப்பமான துணையை தெரிவிற்கு ஏதுவாக குடும்ப, சமய, சமூக ரீதியான தாக்கங்கள் வழிவகுக்கின்றது.

### கலப்பு திருமணம் தொடர்பிலான மதச்சார்ந்த சட்டங்களில் தெளிவின்மை

நாச்சியாதீவு பிரதேச மக்கள் பின்பற்றும் தத்தமது மதம் சார்ந்த திருமண நடைமுறைகள் திருமண சட்டங்கள், சம்பிரதாயங்கள் போன்ற அறிவு போதியளவு அற்றவர்களாக ( 39 பேர்) அறிய முடிகின்றது. அதாவது தத்தமது பெற்றோர்கள் மூலம் அவர்களுக்கு புகட்டப்படும் மதம் சார்ந்த அறிவு அவர்களுக்கு சிறு வயதிலிருந்தே கிடைக்கவில்லை மற்றும் அவர்களில் சிலரது (19 பேர்) பிள்ளைகள் முஸ்லிம் பாடசாலைகளில் கற்கவில்லை. இதனால் அவர்களுக்கு ஆரம்ப நிலை மதம் சார்ந்த அறிவு குறைந்த தன்மையை அவதானிக்க முடிகின்றது.

### குழந்தை வளர்ப்பில் பெற்றோர்கள் விட்ட தவறு

தமது பிள்ளைகள் சிறுவயதில் இருக்கும் போதே மார்க்கம் சார்ந்த விழுமியங்கள் போதியளவு கிடைக்காமலும், மதத்திற்கு மாற்றமான பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு பெற்றோர்கள் அனுப்புவதால் ( 9 பேர்) சுயவிருப்பின்திருமணம் செய்வதற்கு ஒரு காரணமாகவும் அமைகிறது. மேலும் பிள்ளைகள் தொழில் வாய்ப்புகளுக்காக வெளி பிரதேசங்களுக்கு செல்கின்ற வேளையில் அவர்களது தொழில் புரியும் சக ஊழியர்கள் அல்லது சக நண்பர்கள் மாற்று மதத்தவர்களாகவும், அவர்களுடன் நீண்ட கால நட்புறவை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களால் ( 7 பேர் ) திருமணம் செய்ய ஏதுவாக அமைகிறன.

### பொருளாதாரப் பின்னடைவு

முஸ்லிம் குடும்பங்களின் வாழும் வசதி அற்றவர்கள் தத்தமது பிள்ளைகளை திருமணம் செய்து வைப்பதில் பொருளாதார சிரமங்களை கொண்டுள்ளனர். இதனால் அவர்களிடம் வசதி

படைத்தவர்கள் மாற்றுமதமாக இருந்தாலும் முஸ்லிம் பெண்களை திருமணம் செய்வதற்கு முன்வருகின்ற போது திருமணம் செய்து கொடுக்கும் நிலையும் ( 3 பேர்) காணப்படுகின்றது.

**புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள்**

குடும்பத்துடன் இணைந்து இஸ்லாத்தை ஏற்றவர்கள் தமது பிள்ளைகளுக்கு துணைதெரிவு செய்யும் போது தமது குடும்ப உறுப்பினர்களை திருமணம் செய்ய விரும்புகின்ற சமயத்தில் மாற்று மதமாக இருக்கும் நிலையிலும் இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் ( 6 பேர்) திருமணம் செய்துள்ளனர்.

**இரண்டாம் தாரமாக திருமணம் இடம்பெற்றமை**

இரண்டாம் தாரமாக கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களில் (12 பேர்) ஆண்களை விட பெண்கள் அதிகமானவர்களாக அவதானிக்க முடிகின்றது. இவர்கள் முஸ்லிம் ஆண்களை விவாகரத்து பெற்ற பின்னர் முஸ்லிம் அல்லாதவர்களை திருமணம் செய்கின்றனர் இவர்கள் பாடசாலை நண்பர்கள், முறையற்ற தொடர்புகள் கொண்ட சிநேகபூர்வமானவர்களாக இருக்கின்றனர். ஆண்கள், மூத்த மனைவி இருக்கும் போதே முறையற்ற தொடர்புகள் காரணமாகவும், முதலாம் தாரம் பஸ்கு செய்த பின்னரும், முதலாம் தாரம் மரணித்ததன் பின்னரும் இரண்டாவது திருமணமாக மாற்று மத பெண்ணை திருமணம் செய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**விவாகரத்து இடம்பெற்றமை**

முதல் திருமணமாக தத்தமது மதத்தின் பிரகாரம் திருமணம் செய்து விவாகரத்து கோரி இரண்டாம் தாரமாக மாற்று மதத்தவர்களை திருமணம் ( 6 பேர்) செய்துள்ளனர். அவர்களுடைய பாடசாலை நண்பர்கள் மற்றும் பிரதேசத்தில் வேலைகளுக்காக வரும் தொழிலாளர்களை திருமணம் செய்துள்ளனர்.

**கலப்பு திருமணத்தின் பின்னர் ஏற்படும் தாக்கங்கள்**

**குடும்பத்தில் இருந்து விலகி இருத்தல்**

திருமணத்திற்கு முன் இரண்டு தரப்பினர்களின் பின்னணி எதுவாக இருந்தாலும் பொதுவாக கலப்பு திருமணத்தில் இரு தரப்பிலும் தடைகளை சந்திக்க நேரிடும். பெற்றோர்கள் கலப்பு திருமணங்களுக்கு எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர். இவர்களில் மாற்று மதத்தவர்களுடைய குடும்பம் சார்பிலான எதிர்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. இதனால் கலப்பு திருமணம் மேற்கொண்ட தம்பதிகள் ( 19 பேர்) குடும்பங்களை விட்டு விலகி இருக்கும் சூழ்நிலை உருவாகின்றது.

**குடும்ப உறவுகளை பாதுகாப்பதில் எழும் பிரச்சினைகள்**

கலப்பு திருமணம் செய்யும் இரண்டு தரப்பிலும் தத்தமது உறவுகளை பாதுகாக்க இருவரும் சவால்களுக்கு (10 பேர்) முகம் கொடுக்கின்றனர். திருமணத்திற்கு பின்னரான துணையின் குடும்பம் வெவ்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட தங்கள் மருமகள் அல்லது மருமகனின் மாறுபட்ட எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பார்கள். இதன்போது சில பிரச்சினைகள்

உருவாகின்றன. குடும்ப உறுப்பினர்களிடையே குடும்பத்தின் கலாசாரம் மொழி தடைகளும் இங்கே ஒரு பிரச்சினையாக இருகின்றது.

**குடும்பத்தில் மதத்தை போதிப்பதன் பங்களிப்பு குறைவு**

பொதுவாக குடும்பத்தில் பெண்கள், பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் அதிக ஈடுபாடு கொண்டமையினாலும், அவர்கள் மாற்று மதத்தவர்களாக இருப்பதனால் மார்க்கம் சார்ந்த தெளிவு இல்லாமையினாலும், பாடசாலை, மத்ரசா மூலம் அதிகமானவர்கள் மார்க்கத்தை போதிக்க வழிவகுக்கின்றனர். 29 பேர்களின் பிள்ளைகள் பாடசாலைகளிலும் 31 பேர்களின் பிள்ளைகள் மத்ரசாக்களிலும் மூலம் மார்க்கத்தை போதிக்கின்றனர். இதனால் மார்க்கத்தை குடும்பங்களினூடாக பிள்ளைகளுக்கு வழங்கும் நிலை அறிதாக காணப்படுகின்றன.

**சிறந்த குடும்பத்தை கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகள்**

பிள்ளைகளின் எதிர்காலத்துடன் கூடிய சிரமங்களை சமாளிக்க முடியாத சந்தர்ப்பங்களை கணவன், மனைவி முகம் கொடுக்கின்றனர். தத்தமது மதம், மொழியை பிரயோகிக்கும் பாடசாலைகளில் கற்பிக்க வைப்பதில் கருத்து முரண்பாடுகள் உருவாகின்றன. முஸ்லிமாக மதம் மாறிய தம்பதிகள் குர்ஆனை கற்பதில் சிரமங்களையும், அதன் தார்ப்பரீகம் உணரப்படாமையும், அவதானிக்க முடிகின்றன. குழந்தையின் பெயர், விருத்த சேதனம் உள்ளிட்ட கலாசார அம்சங்களிலும் பிரச்சினைகள் உருவாகின்றன. ஆனால் இவர்கள் திருமணத்திற்கு முன் குழந்தை வளர்ப்பில் ஒருமித்த கருத்துக்களை கொண்டிருந்தாலும் திருமணத்திற்கு பின் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

**இஸ்லாத்தை விட்டு வெளியேறுதல்**

சுய விருப்பத்தில் மதமாற்றம் சமூகத்தில் இடம்பெறுகின்றபோதிலும், கலப்பு திருமணம் செய்வதற்காக இஸ்லாத்தை விட்டு வெளியேறுதல் பிரதான காரணமாக இருக்கின்றது. 12 பேர் இஸ்லாத்தை விட்டு மதம் மாறியுள்ளனர். இவர்களில் நாச்சியாதீவிற்கு குடியேறி வந்தவர்களை விட கூடுதலாக நாச்சியாதீவு பூர்வீகம் கொண்டவர்கள் தற்போது மதமாறியுள்ளனர். ஆண்களை விட பெண்கள் (7 பேர்) கூடுதலாக உள்ளனர்.

**காலசாரத்தை பின்பற்றுவதில் குழப்ப நிலை**

இப்பிரதேசத்தில் திருமணம் செய்த ஆண்களின் பிள்ளைகள் இஸ்லாமிய கலாசாரத்தில் அடிப்படையில் பெரும்பான்மையாக இருந்தாலும், அவர்களது துணை சிலர் ( 16 பேர்) முழுமையான கலாச்சாரத்தை பின்பற்றக்கூடிய நிலையிலிருந்து விலகியும் உள்ளனர். பிரதேச பெண்கள் மற்றும் துணைகள் குறிப்பிட்ட மதத்தில் தங்கியிருப்பதை அவதானிக்க முடியாமலும், அவர்களது பிள்ளைகள் பின்பற்றும் கலாச்சார அமைப்பு இஸ்லாத்திற்கு மாற்றமாகவே காணப்படுகிறது.

**குறிப்பிட்ட மதத்தை சரியாக பின்பற்றாமை**

நாச்சியாதீவு பிரதேசத்தில் கலப்பு திருமணம் மேற்கொண்ட அதிகமான ஆண்களின் பிள்ளைகள் இஸ்லாத்தை பின்பற்றுகின்றனர். பொதுவாக ஒரு குடும்பத்தின் ஆண் நிர்வாகியாக செயற்படுகின்ற சமயத்தில் தந்தையின் சமயம் பிள்ளையின் மதத்தை பிரதிபலிக்கின்றது.அதே சமயம் இப்பிரதேசத்தில் வாழும் பெண்கள் மாற்றுமத திருமணம் செய்யும்போது அவர்கள் முஸ்லிமாகவும், தமிழராகவும், சிங்களவர்களாக இருந்தாலும் அவர்களுடைய கணவர்கள் பின்பற்றக்கூடிய மதத்திலேயே தத்தமது பிள்ளைகளும் பின்பற்றப்பட வேண்டிய நிலைக்கு ( 7 பேர் ) தள்ளப்படுகின்றனர்.

### மொழி மாற்றம்

நாச்சியாதீவு பிரதேசத்தில் அதிகமான ஆண்கள் கலப்பு திருமணம் செய்த அவர்களது துணை பெரும்பாலும் சிங்கள மதத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள். அவர்களுக்கு தத்தமது குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கான மொழிப் பிரச்சினை அவர்களை சிங்கள மொழி பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஏதுவாக அமைகிறது. மேலும் குடும்பத்தில் மனைவி பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் அதிக பங்களிப்பு வழங்குவதாலும் அவர்கள் பேசக்கூடிய மொழியிலேயே பிள்ளைகளுக்கும் வழங்க வேண்டிய நிலை உருவாவதை அறிய முடிகின்றது. மேலும் குடும்பங்கள் இடையிலான உரையாடல் பெரும்பாலும் இரண்டு மொழிகளை தழுவியதாகவும், சிங்கள மொழி பேசக்கூடிய துணைகளை திருமணம் செய்வதன் மூலம் அக்குடும்பத்தில் இடைத்தொடர்பு சிங்கள மொழியிலேயே பிரயோகிக்கப்படுகின்றன.

### சாதகமான தாக்கங்கள்

கலப்பு திருமணம் மூலம் சாதகமான விளைவுகளை அவதானிக்கும் போது அதிகமானவர்கள் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். இருப்பினும் இவர்களில் அதிகமானவர்கள் திருமணத்திற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளமையை அறிய முடிகின்றது. இவர்களில் பெண்களை விட ஆண்கள் அதிகமாக கலப்பு திருமணம் செய்ததன் மூலம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கலப்பு திருமணம் மேற்கொண்டவர்களின் பிள்ளைகள் அதிக அளவு சமூகத்தன்மை கொண்டவர்களாகவும், தகவல் தொடர்பு திறன் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். கலப்பு திருமணத்தின் போது குடும்பத்தின் மூலம் எதிர்ப்பு உருவாகும் போது தம்பதிகள் ஒருவருக்கொருவர் உற்ற ஆதரவாகவும் பாதுகாப்பவும் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

## முடிவுரை (Conclusion)

கலப்பு திருமணம் காலந்தொட்டு இடம்பெறுவதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும், இஸ்லாமிய போதனைகளில் தெளிவின்றிய நிலை ஏனைய காரணங்களுக்கு வழிவக்கிறன எனலாம். மேலும் குடும்பத்தில் கணவன் மனைவி பிள்ளைகள் இடையே இஸ்லாம் கூறும் வழிமுறைகளை பின்பற்றுவதில் விடும் தவறுகளும் பொருளாதார சிக்கல்களும், இத்திருமணம்

இடம்பெற ஏதுவான காரணங்களாகும். மேலும் குடும்பம், பிள்ளைகள், சமயம், என்ற அடிப்படையில் இத்திருமணம் மூலம் எழும் விளைவுகளை அடையாளப்படுத்த முடிகின்றது.

**ஆலோசனைகள் ( Recommendations)**

- பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கேள்விகள் எழும், மதங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தோற்றுவிக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது இளந்தலைமுறையினருக்கு மதம் சார்ந்த சட்டங்கள் பற்றிய விளிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படல் வேண்டும்.
- இஸ்லாத்தை ஏற்கும் முன்பு அனைத்து கடமைகளையும், அதன் அவசியத்தை உணர்த்த வேண்டும்.
- காழிகளும், உலமாக்களதும், திருமணப் பதிவாளர்களும் இத்திருமணம் தொடர்பான ஒத்துழைப்பும், சட்டத்தை பிரயோகிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
- திருமணம் சிறந்த இஸ்லாமிய குடும்ப சூழ்நிலை கட்டியெழுப்புவதன் அவசியத்தை அனைவருக்கும் உணரத்த வேண்டும்.
- கலப்பு திருமணம் சமூகத்தில் முற்றிலும் குற்றச்செயலாக கருதுகின்ற தன்மை நீக்கப்பட வேண்டும். இதன் மூலம் இஸ்லாமிய போதனையில் திருமணம் இடம்பெறுவதற்கு வழிபிறக்கும்.

**உசாத்துணைகள் ( References )**


Jones, w., heng, l. & maznah, M. (2009). *Muslim non-muslim marriage* . (Rev. ed.). Retrieved from:http://www.muse.jhu.edu

Kartikasari, r. & haryanti, y. (2017, March 3). communication pattern of mixed marriage( aqualitative study on the mixed marriage parents educating their children).Retrievedfrom:https://eprints.ums.ac.id

Law.gov,k.(2019,August).interfaith prohibition Retrieved from law.gov:http://www.loc.gov

Mohammad, I. j. & Lehmann, C.(2011, June 5). women's rights in Islam regarding marriage and divorce. *journal of law and practice*. *iv(1)* p. 1 - 13 Retrieved from:http://www.open.mitchellhamline.edu

Mubarak, A . (1998).*islam on marital rights.* Ohio : Islam international publication

Nerina, j. (2014, Dec 18). how ethnicity and religion affect attitudes towards mixed,marriages.Australian journal of sex, *marriage and family. vi(4)* p. 221 - 229 Retrieved from:http://www.trandfonline.com

Rahman, a. (2013, March 14). the importance of marriage in Islam. Retrieved from importance marriage in Islam:http://islam.ru/en

Ratno Lukito . (2009).Trapped between Legal Unification and Pluralism: The Indonesian Supreme Court's Decision on Interfaith Marriage: Retrieved From:https://www.cambridge.org/core/books/muslimnonmuslim-marriage